சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 06.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **82/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | பார்த்தீபன் |
| தந்தை பெயர் | : | இளங்கோவன் |
| கிராமம் | : | ஏத்தக்குடி |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | கொத்தனார் |
| வயது | : | 25 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

6 ம் எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 6 ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மோகனை தெரியாது. ஆஜர் எதிரியை

எனக்கு தெரியாது. நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன். இவ்வழக்கு சம்மந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

கடந்த 31.12.2016 ம் தேதியன்று நள்ளிரவு 12.45 மணிக்கு ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு எங்கள் தெருவை சேர்ந்த பசங்க கேக் வெட்டி ஆரவாரம் செய்து கொண்டிருந்தபோது, எங்கள் தெருவில் உள்ள 4 பசங்க வாளியில் சுண்ணாம்பு கரைத்து Happy New Year என்று எழுதப்போனதை ஆஜர் எதிரி தடுத்து இங்கே எழுதக்கூடாது டா உங்க தெருவில் போய் எழுதுங்கடா என்று திட்டியதாகவும், அதை தட்டி கேட்ட அ.சா.1 மோகனை ஆஜர் எதிரிள் கம்பியாலும், கையாலும் கம்பாலும், கல்லாலும் சாதி பெயரை சொல்லி திட்டி அடித்ததாகவும், மேற்படி சம்பவத்தை பார்க்க சென்ற என் மீதும் ஆஜர் எதிரிகள் கல்லால் அடித்ததில் எனக்கு நெற்றியில் இரத்த காயம் ஏற்பட்டதாகவும், காயம் பட்ட என்னையும், மற்றவர்களையும் மன்னார்குடி அரசு மருத்தவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்த்ததாகவும், அப்பொழுது சிகிச்சையிலிருந்த அ.சா.1 மோகனிடம் தலையாமங்கலம் போலீசார் வந்து வாக்குமூலம் சென்றது தனக்கு தெரியாது என்றும், என்னை போலீசார் விசாரிக்கும்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை காப்பாற்ற வேண்டி, பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த
நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு
பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த
போது சாட்சி சரியென்று என் முன்பாக
கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.06 16:47:56 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.